28
688

காமாக்ஷி நிலயம்.

வெளியீடு 1.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ காமாக்ஷிதேவி சமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் துணை.

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள்
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி சுவாமிகளடிமை
இயற்றிய

குறவர் பாமாலை.

கச்சியம்பதிவளர் காமாக்ஷிதேவி அருள் [illegible] அ[illegible]ணல்
காமகோடி பீடாதிபதி சற்குரு கச்[illegible]பதிவர எ[illegible]ணிஞர்
கருணை வள்ளல் ஏகாம்பரரும் வருஷித்தார் நல்விருந்து
கச்சியின் விகடசக்கர கணபதியுன் பதமலரை பணிவாம்.

Q2:417
N52
113321

P.S. கோவிந்தருஜு முதலியார்,
காமாக்ஷி நிலயம் சங்கீத சபா,
காஞ்சீபுரம்.

உ

காஞ்சீபுரம் காமாக்ஷி தேவி.

ஓம் தத்ஸத் குருப்யோ நம:



காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள்

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி சுவாமிகள்.

ஸ்ரீ காமாக்ஷி சமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் துணை

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் ஜகத்குருப்பியோ நமோ நம:

எனது சற்குருவின்பேரில் பாமாலை இயற்றியவர்

P. S. கோவிந்தராஜுலு முதலியார் அவர்கள்

காமாக்ஷி நிலயம், காஞ்சிபுரம்.

அடியனன் சிறு பிராயமிருந்து வாணிகத் துறையிலேயே இருந்தவன். கல்வியில் கொஞ்சமும் அனுபோகமில்லை என் பது பலரும் அறிந்ததே ஆகும். சற்குருவின் அனுக்கிரக வீக்ஷண்யத்தாலும் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் திரு அருளாலும் இந்தப் பாமாலை எழுதத் துணிந்தனன். அடியவனுடைய பேரவாவினுல் எழுதப்பட்டன. இலக்கிய இலக்கணம் அறிந்தவன் அல்லன். இதில் ஏதேனும் சொற்குற்றம், பொருட்குற்றம் இருப்பின் குற்றம் களைந்து குணங்களைக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலகமக்கள் உய்ய சற்குருநாதர்களை வணங்குதல், கடவுளை வழிபடுதல். சமயாசாரி சுவாமிகள் அருளித்தந்த திருமுறைகள் ஓதுதல் மிக்க நலம். இரு நிதி பெறலாம். இந்தப் பாமாலை சற்குருவின்பேரில் பாடினவை. திரு அருள் சுரந்த பன்னிரண்டு திருமுறை, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், தாயுமானுர், பட்டணத்தடிகள் இராமலிங்க வள்ளலார் அருளிய அருள் சுரந்த பாடல்களை தினப்பாராயணம் செய்யுமாறு சுருக்கமாகத் திரட்டியுள்ளார்கள். பாடிக் கடவுளை வழிபடல் நலம். இம்மையிலும், மறுமையிலும் சுகம்பட வாழலாமே.

தென்னுற்காடு மாவட்டம், மேல்பட்டாம்பாக்கம் போஸ்ட், கொங்கராயனூர் கிராமம் நிலச்சுவான்தாரரும், கிராம மணியமும், திருவதிகை வீரட்டானம் தேவஸ்தான தற்கால தர்மகர்த்தருமான திருவாளர் லக்ஷ்மிநாராயண ரெட்டியார் குமாரர் **எல். ராமஸாமி ரெட்டியார் அவர்களின்** பொருளுதவியால் இந்த பாமாலையினை வெளியிடப் பட்டது.

சிதம்பரம் பச்சையப்பன் உயர்தரக்கல்வி கலாசாலை தமிழ் ஆசிரியர் உயர்திருவாளர், **ந. சிவப்பிரகாச தேசிகர் அவர்களால்** பரிசோதித்து வெளியிடப்பெற்றது.

ந. சிவப்பிரகாச தேசிகர்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி,
சிதம்பரம்.

வேண்டுகோள்

சப்தபுரிகளுள் நகரேஷு காஞ்சிபுரியில் தக்கவர்கள் வந்தால் தங்கும் வசதிகள் கிடையாது. க்ஷேத்திரமென்று திருமணம் செய்ய நிச்சயித்து வெளியூரார்கள் வந்தால் திருமண மன்றம் வசதி கிடையாது. சத்திரம், சாவடிகளில் பல தொந்திரவு ஏற்படுகிறது. தெரிசனர்த்திகள் தகுந்தவர்கள் வந்தாலும் நல்ல வசதிகள் கிடையாது. இதுகளை அனுசரித்தே எனது வீடுதனை தர்மங்களுக்காக பலருக்கும் பயன்படும்படியாக உறுதி செய்துள்ளேன். ஆடீசன்பேட்டை யென்பது சிவ கஞ்சிக்கும் விஷ்ணு கஞ்சிக்கும் மத்தியில் உள்ளது. பல சாமான்கள் கிடைக்கும் நல்ல வசதியுள்ள கடை வீதி. ஆடீசன் பேட்டையில் உள்ள காமாக்ஷி நிலயம், சங்கீத சபா சிறந்த கட்டடம் இப்போது கட்டியிருக்கும் கட்டடமோ சுமார் முப்பது ஆயிரம் மதிப்பிடக்கூடிய நல்ல கட்டடமென்பது பலரும் அறிந்தவை. எனது சற்குருநாதர் ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் அபிப்ராயமும் கலந்து ஐந்து டிரஸ்டிகளும் ஏற்பாடு செய்திருக்கிறது. மேல் மாடிகள் கட்டுவிக்க பெரும் பொருளும் தேவையாக இருக்கிறது. கீழ் நிலயம் கலியாண மன்றமும், மேல் மாடி ஸ்ரீ காமாக்ஷிதேவி தேவார பாடசாலைக்காகவும் இரண்டாவது மாடியும் கட்டுவித்து சங்கீத சபாவாகவும் ஒரே ஜாகையில் மூன்று தர்மமும் முப்பத்திரெண்டு அறம் வளரும் சிறந்த தர்மம். கல்வியில் சிறந்த தமிழ் மணம் கமழும் நால்வர்கள் சமயாச்சாரிகள் உயர்நிலை கலை பயிலும் பள்ளியெனவும் சொல்லக்கூடியவை. இந்த சிறந்த தர்மங்களுக்காக புண்ணிய சீலர்கள் பெரும் பொருள் உதவி செய்து பூர்த்திசெய்விக்க வேண்டுகிறோம். இந்த தர்மங்களுக்காக பொருள் அனுப்ப விருப்பம் உள்ளவர்கள் காமாக்ஷி நிலயம், சங்கீத சபா, காஞ்சீபுரம் என்று அனுப்பலாம். பேங்கு மூலமாக அனுப்ப விருப்பம் உள்ளவர்கள் சென்ட்ரல் பேங்கு, காஞ்சீபுரம் என்றும் அனுப்பலாம். என்றும் அழியாச் சிறந்த தர்மங்களை ஆதரிக்க கோரும்

உங்களன்பார்ந்த,

காமாக்ஷி நிலயம் சங்கீத சபா

கமிட்டி மெம்பர்கள்

காஞ்சீபுரம்.

உ

திருச்சிற்றம்பலம்.

விநாயகர் வணக்கம்.

குறவர் பாமாலை.

அத்திமுகனடி நித்தம் நினைபவர்
சித்தி திருவொடு முத்தி பெறுவரே.

கடவுள் வணக்கம்.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

நாயன்மார்கள் வணக்கம்.

உலகினில் சைவம் வோங்க ஒருவர்பின் முறையாய் தோன்றி
அளவிலா பசுக்கள் பாசம் அகற்றியே பதியில் சேர்க்கும்
பலபல பாடல்தந்து சரியாதி நாலும் காட்டும்
திலகம்போல் உதித்த அறுபத்துநால்வர் அடிதாள் போற்றி.

காஞ்சி புராணம்.

பேயன்ன புறச்சமயப்பிணக்கு நூல் வழியனைத்தும்
[பிழையே யன்றி
வாயன்மை தெளிந்து சைவசித்தாந்த வழிதேற அதீத
[வாழ்விற்
போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும்
[பொருளாக்கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு
[நான்பெற்றேனல். —சிவஞான சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. —திருக்குறள்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மையாளர் உழைப்பினை தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் தாரீர்.
—பாரதியார் திருவாய்மொழி.

சற்குரு வணக்கம்.

ஜனகாதி நால்வர் வேண்ட கல்லாலின் கீழமர்ந்து
மௌனமாய் ஞானந்தன்னை காட்டிடசின் முத்திரைகொண்டு
அனங்கனை எரித்து மாதை காதயும் பெருமை கொண்ட
மனதில் மாசறவே போக்கி ஆட்கொள்ளும் குருவே போற்றி.

ஆவரண சக்தியாலே அலைகின்றேன் அவனி மீதில்
காரண வடிவாய் கல்லால் நிழலிருந்தருளு மூர்த்தி
யாவரும் வணங்கிப்போற்ற அருளுடைை குருவே எந்தன்
உடல்பொருள் ஆவிகொண்டு உகந்தென்னை காருங்
[கோவே. 2

காப்பது உன்பாரந்தானே பரமனே காருண்ய மூர்த்தி
மாற்றிடர் மயக்கம்யாவும் அகற்றியே ஞானம் நல்கி
தோற்றமாய் வெளியில் உம்மைகண்டு ஆனந்தம்கொள்ள
நீற்றனே நிமலாநீரணி முதல்வாயானுந்தன் அடைக்கலம்
[தானே. 3

உலகினில் சைவம்ஓங்க ஒருவர்பின் முறையாய் தோன்றி
அளவிலா பசுக்கள் பாசம் அகற்றியே ஜகத்குருவாக நல்கி
சந்த்ர சேகரேந்த்ர சரஸ்வதி கலைநிதி இருநிதி பார்புகழ்
காமாக்ஷி தவகம்பாநதி தபோநிதி காமகோடி பீடாதிபதி
[சற்குருதாமே. 4

உலகினில் சைவம்ஓங்க தேவர்கள்சபையாக கூட்டப்பெற்று
உம்மை அனுப்பவந்த சற்குருவே சரஸ்வதி அண்ணலே
எங்கும் சைவம் திகழவேண்டி பார்புகழ் ஜகத்குருவாகத்
[தோன்றி
எங்கும் கலிகால துர்கால அரிஷ்டம் நீக்கவந்த சற்குருவே.

பார்புகழநாடு நலம்பெற முன்னாள் நால்வர்கள் தோன்றி
[னரன்றோ
பார்புகழநாடு நலம்பெற இந்நாள் காஞ்சிகாமகோடி
[பீடாதிபதி
தர்மபுர ஆவடுதண்டுறை திருப்பனந்தாள் நால்வர்கள்
[போலன்றோ
தர்மமே ஒருஉருவாக வந்து பார்புகழத் தோன்றிய
[சற்குரு நாதரே. 6

பாமாலை.

அரன் அயன்மால் ஐங்கரன் ஆறுமுகன் அருளினமுழு
[முதற்குருவே
ஆதிபகவதி வாணிகலைமதி இலக்குமிகுணவதி அருளின
[சற்குருவே

இறைவன் அருளின பானுமதி செய்பூந்தி பொன் வெள்ளி
[சனி பாம்பு
ஈசரும் மாலயன் தேவர் முனிவர் யாவரும் அனுப்பவந்த
[ஜகத்குருவே. 7

ஆதிகாலந் தன்னிலே ஆதிசங்கரர் கேரள நாடு தோன்றினர்
மீதிகாலந் தன்னிலே பலசங்கரர் தோன்றி மறைந்தனர்
நீதிநெறி இல்லா இக்காலத்திலே பாதகம் அறுக்கநம்
[சற்குரு
நீதிபதிபோல நடுநாடு விழிபுரம் என்னும் நகர் உதித்தனர் 8

உத்தமர் அந்தணர் குலந்தனிலே பலஜென்ம தபத்தின்
[பயனலே
உத்தமர் அன்னை தந்தை செய்தநற்றபயோக பலத்தினலே
உதித்தனர் ஜகத்குரு சங்கரர் பீடத்திலே முன்தப
[பலத்தினலே
உறவினர் இல்லற வாழ்க்கைவிட்டார் துறவற
[இன்பத்தாலே. 9

காவிதனை ஆண்டு பதிநாறுபெற்று மடாதிபதி எனப்
[பட்டமும்பெற்று
காஞ்சிகாமகோடி பீடாதிபதி எனப்புகழ் சோழ
[திருக்குடந்தை தோன்றி
காசினிதனிலே பல்வேறு மடாலய உரிமை மகிழப்பெற்று
காஞ்சிவிட்டு எக்காலமும் குடந்தைநகர் இருக்கப்பெற்று.

நற்குரு பார்வைதிகழும் தென்னடு என்னளும் நன்னடு
நால்வர் அப்பர் சுந்தரர் சம்பந்தர் மணிவாசகர் வாழந்த
[நன்னடு
அறுவத்துமூவர் மற்றும்பல சான்றேர் உதித்த நன்னடு
தருமபுர ஆவடுதண்டுறை திருப்பனந்தாள் முக்கண்
[திகழும் நாடு. 11

கதிரவன் உதயமாகும் கந்தகோட்ட சாகரர்கீழ்
[திசைநாடு
கேரளம் மலைநாடு சேரசோழ பாண்டிய தொண்டை
[நடுநாடு மேல்நாடு
தசரதகுமாரர் ஸ்ரீராமர் புனைந்த லிங்கராமேஸ்வர
[தனுஷ்கோடி குமரிநாடு
முனிவரர் தபயோக காசிபுரி ரிஷிகேச வெள்ளியங்கிரி
[நாடு. 12

சமயாசாரிகள் அருளின மறைப்படி இறைவன் திருவடி
[பணிந்தார்
கங்கையமுன சரஸ்வதி திருவேணி சங்கம் சப்தநதி
[திருக்குள தீர்த்தமும்
இந்தியர் இந்தியா எங்கும் திகழும் இறைவனை மாலை
[பணிந்தார்
இருப்புப்பாதைவண்டி ஊதுவண்டி யகற்றி கால்நடை
[போகப்பெற்றூர். 13

கச்சிநகர் உமையவள் காமாக்ஷி ஆலயம் மனமகிழத்
[திருப்பணி முடித்தார்
குடந்தைநகர் புகழ்மடாலயம் பலர்மகிழ திகழத்திருப்பணி
[புனைந்தார்
பேர்பெறும் தஞ்சைநகர் பொன்னிகாமாக்ஷி ஆலயம்
[திருப்பணி புனைந்தார்
சீர்பெருகும் சோழநன்னாடு நீர்பெருகும் அகிலாண்டேசுவரி
[தாடங்கப்பிரதிஷ்டை புனைந்தார். 14

உலகமக்கள் மகிழ்ந்துதிகழ உளம்கனிந்த தபயோக
[சற்குருவே
உண்மை ஒற்றுமையில்லாத இக்காலத்திலே கடவுள்போல
திகழும் குருவே
எங்கும் கடவுளை தூஷணை செய்யும் துர்ச்சனரை திருத்த
[வந்த குருவே
எந்த காலமும் யோகமும் தானமும் தயவும் ஒரு உருவாகி
வந்த குருவே. 15

அனியாயபாதக இக்காலத்திலே ஆலயம் சீர்கெட்டதே
அரன் அயன் அரி முனிவரர்தேவர் முன்னிருந்தே
[காப்பாரந்தோ
ஆறுமுகன் ஐங்கரன் உலகமாதா துணைபுரிந்து காக்க
ஆறுதாரத்தின் மூலாதாரப் பொருளினை அருளி ஆதரிக்கும்
[சற்குருவே. 16

போற்றி திரு விருத்தம்.

அறம்பொருள் இன்பம்வீடு பேறுபெற்றசற்குருவேபோற்றி
ஆதிசங்கரர் அவதார ரூபமதாகவந்த சற்குருவே போற்றி
இருவினை கர்மாவினை களைந்து காக்கும் சற்குருவே போற்றி
ஈரேழுபுவனமும் எங்கும் யேற்கும் எங்கள் சற்குருவே
[போற்றி. 17

உலகபஞ்சம் நீங்க திருப்பாவை திருமுறை திகழச்செய்
[சற்குருவே போற்றி
ஊக்கமதாகத் துபிலகற்றிசெய் தபயோக நிஷ்டை
[சற்குருவே போற்றி
எண்ணியதேவி காமாக்ஷி வெள்ளிரதம் செய்வித்த
[சற்குருவே போற்றி
ஏகமனதாக பூரிசங்கரர்கூடி வெள்ளிரதம் நடத்திய
[சற்குருவே போற்றி. 81

ஐங்கரனருளால் அக்கரை கடந்த சர்க்கரையே சற்குருவே
[போற்றி
ஒருநாளும் ஓயாது வேததிருமுறை ஓதிவைக்கும் சற்குருவே
[போற்றி
ஓங்காரி ரீங்காரி அஷ்டாக்ஷரி திரிபுரசுந்தரி தியான
[சற்குருவே போற்றி
அஃகம் சுருக்கிநீர் ஆன்மா அடக்கி ஆனந்த தாண்டவ
[சற்குருவே போற்றி. 19

ஹகமும் புறமும் ஒன்ருகி கதிரவன்மதி மகிழ்சற் குருவே
[போற்றி
ஸமஸ்கிருத சகலகலை திருமறைபயின்ற சற்குருவேபோற்றி
ஜகமெலாம் புகழும் ஜகத்குரு சங்கரரே சற்குருவேபோற்றி
ஷண்மதஸ்தாபன பரம்பரையாதீன சற்குருவே போற்றி
க்ஷடாக்ஷசரி அஷ்டாக்ஷசரி பஞ்சாக்ஷரி க்ருபை சற்குருவே
[போற்றி போற்றி 20

அந்தணர் சம்பந்தரே சரஸ்வதி எனத்தோன்றிய ஜகத்
[குருவே
அருந்துணையாகமற்று மூவர்கள்தோன்றினர் தேசிககுருவே
அறம்பொருள் இன்பம் வீடுதனைக் காட்டவல்ல கருணை
[மூர்த்திகளல்லவோ
அருந்தபயோக இருநிதி கலைமதி இலக்குமி பெருநிதி
[பார்வதிமகிழ் குரு நால்வர்தாமே 21

திருவாவடுதுரைமேவும் திருக்கைலாய பரம்பரையாதீன
[நமசிவாய குருவே
திருமூல தபயோகபுரி நவகோடி சித்தர் திருமாளிகை
[தேவர்கள்
திருஞான சம்மந்தர் பொற்கிழி மாசிலாமணி ஈசரளிக்கப்
[பெற்ற
திருக்கைலாய பரம்பரை சுப்பிரமண்ய தேசிக வள்ளல்
நால்வருள் ஒருவர்தாமே 22

தர்மமே உருவாகிவந்து பலஆலயம் இறைவனை வழிபடும்
தர்மபுர ஆதின ஞானசம்மந்த பரம்பரையாதீன குருவே
தர்மகர்த்தரே பார்புகழ் அருந்தவ வள்ளலே தேசிகராக
[வந்து
தர்மபுர ஆதீன சுப்பிரமண்ய குருநாதரும் நால்வர்
[தாமே 23

திருப்பனந்தாள் எனும் பார்புகழ் காசிபுர ஆதீனமன்றோ
திருச்செந்தூர் முருகனருள் குமரகுருபரர் ஆதீன காசிபுரி
[யன்றோ
திரு ஆதீன பரமாசாரியர் மடாலயமன்றோ பார்புகழ்ந்த
திருஅருள் நந்திசுவாமிகளே தெய்வீக சமயாசாரிகளே 24

உத்தமர் மடாதிபதிகள் மனமுவந்து கடவுளைக் கருத்தில்
[நினைந்துருகி
உத்தமர் பாரினில் பஞ்சம் நீங்கிக் கடவுளைப் போற்றி
[வாழவேண்டி
ஊக்கமதாக செய்நற்பூஜை இறைவன் இறைவி அறிந்தே
கடவுள் எண்ணி நல்லார் உளரேல் அவர் பொருட்டு
பெய்யுமழையே 25

காஞ்சி காமகோடி பீடாதிபதி சற்குருவே போற்றி
திருவாவடுதுரை பரமபரையாதீன சற்குருவே போற்றி
தர்ம்மபுர பரம்பரையாதீன சற்குருவே போற்றி
திருப்பனந்தாள் குமரகுருபரர் ஆதீன சற்குருவே போற்றி
[போற்றி 26

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குருவே கர்ப்பகத்
[தருவேயோ
திருவாவடுதுறை ஆதீனம் இந்திரபதவி யன்றோ
தர்மபுர ஆதினம் குபேரரே எனச்சொல்லலாமே
திருப்பனந்தாள் ஆதினமோ கொடையாளி கர்ணரே என
[சொல்லலாமே 27

வெண்ணிலாவே

மண்ணுலகு தன்னிலே விண்ணுலகை விட்டு
காரியகாரண ரூபமதாக வந்து
தோன்றிய சற்குருவே வெண்ணிலாவே 28

மற்று மூவர்கள் சோழ நன்னாடு
மனச்சாந்தியோடு தேவதா வழிபாடு
செய்கிறார்கள் வெண்ணிலாவே 29

மடாதிபதிகள் என்று நற்பெயர் பெற்று
தர்மமே ஒரு உருவாகி வந்த
தர்மபுரமென்ற நன்னாடு வெண்ணிலாவே 30

மற்றுதிரு ஆவடுதுரை திருப்பனந்தாள்
என்று நற்பேரும் பெற்று ஆலயவழிபாடு
சுவாமிகள் செய்குருர்கள் வெண்ணிலாவே 31

மழையில்லாத உலக க்ஷாமம் கண்டு
வெளியே புறப்பட்டு உலகமக்கள் வாழ
கடவுளை வேண்டுகிருர்கள் வெண்ணிலாவே 32

மண்ணுலகு நீதிநெறி யில்லாதுகண்டு
கோயிலேது குளமேது கடவுளேது என்ற
பாமரரைக்கண்டு சுவாமிகள் கலங்குகிருர்கள்
வெண்ணிலாவே 33

மானிடர் கலிகாலத்திலே மாறிடுவார்
சைவம் குன்றிடுமே என்று விண்ணுலகு
தேர்ந்தனுப்பவந்த சற்குரு வெண்ணிலாவே 34

மாரிசன் மாலியவான் சொல்லை கேளாது சீதையால்
இராவணன் குலமே வேருேடு
ஒழிந்தது கேட்டிலையோ வெண்ணிலாவே 35

மாபாதகன் இந்திரபதவி பெற்ருே மென்று
நகுஷன் தேவர்கள் சாபத்தாலே
பாம்பாகிக்கிடந்தானே தெரியாதோ வெண்ணிலாவே
36

மாபாரதம் உலகம் போற்றத்தகும்
கடவுள் கண்ணன் சொல்லைக் கேளாது
துரியன்குலமழிந்ததுபார்த்தாயோ வெண்ணிலாவே 37

மாபாதகர் நீதிநெறி உணராது கடவுளைத்
தூஷித்தும் சற்சனரை பழிக்கும்
கர்ம்மம்தேடும் பாதகரைக்கண்டு கவலைபடுகிருர்
வெண்ணிலாவே 38

மிருகண்டர் புத்திரர் மார்க்கண்டர் செய்நற்பூஜை
மறலியைக் காய்ந்தது நம் சற்குரு தினபூஜை
செய்கிருர் நாடுசெழிக்கவே வெண்ணிலாவே 39

மீனுக்ஷி காமாக்ஷி விசாலாக்ஷி நீலாயதாக்ஷி
சிவகாம சுந்தரி உண்ணுமுலை கௌரிதேவி
அகிலாண்டேசுவரி பூஜை நாடு செழிக்க
வெண்ணிலாவே 40

மும்மூர்த்திகள் முனிவர்கள் தேவர்கள் யாவருமே
சபைகூடி மண்ணுலகு பக்தி குறைந்திடுமே
மறைந்திடுமே என்று அனுப்பவந்த சற்குரு
வெண்ணிலாவே 41

மூடக்கருத்தான இக்காலத்திலே
மூத்தோர் சொல்கேளாது தந்தைதாய் சற்குருதனை
மூடர்கள் பழிப்பதைக்கேட்டு கடவுளே பயந்து
[கட்டினர் மூட்டை கையை வெண்ணிலாவே 42

மெல்லியர் உத்தமர் சிரோன்மணிகள்
கற்புக்கரசிகள் வாழ்ந்த நன்னடு
பாழும் பொய்கதை சினிமாவால் கெட்டதே
[வெண்ணிலாவே 43

மேனடுபோலவே இன்னடு வேதங்களேது
வருணுசிரமமேது கடவுளேது என்பதைக்
கேட்டுக் கலங்கினர் நம்சற்குரு வெண்ணிலாவே 44

மையல் வெறிகொண்டு மனமும் தடுமாறி
கடவுளை சற்சனரைப் பழிக்கும்
கற்ற கல்லாதாரைக்கண்டு கவலைப்படுகுருர் சற்குரு
[வெண்ணிலாவே 45

மையல்வெறிகொண்டு கடவுளை தூஷிக்கும்
கற்றவர் புருணம் சொல்லுதே என்குருர் குற்றம்
புருணம் பொய் என்போர் வெண்ணிலாவே 46

மொரசுகொட்டி கடவுளைக் காய்ந்த கடும்பகை
கடவுள் காட்டினர் கொடும்பஞ்சம்
கடவுளை வேண்டுகிருர் சற்குரு வெண்ணிலாவே 47

மோசக்கருத்தான இக்காலத்திலே
நம் சற்குரு சைவம் தழைத்தோங்கக்
கடவுளை வேண்டுகிருர் சற்குரு வெண்ணிலாவே 48

மௌனமும் உபவாசமும் என்னளும்
உலகமக்கள் தழைத்தோங்க தினம்
சந்திரமௌளி அகிலாண்டேசுவரி தியானம் செய்கிருர்
[நம் சற்குரு வெண்ணிலாவே 49

சற்சங்க சற்குருநாதரைக் காணுத கண்ணது கண்ணே
சாகித்ய சாந்தசொரூபரைக் காணுத கண்ணதுகண்ணே
சிற்சபையும் பொற்சபையும் திகழும் சற்குருவைகாணுத
[கண்ணது கண்ணே
சீருத சற்குரு சுத்தமனத்தரை காணுத கண்ணது
[புண்ணே 50

அருந்தவ சற்குருவே அன்னை எனும் தயவுடைய அண்ணலே
அருள்சுரந்த வள்ளலே சீனியே தேனே பாகே தெவிட்டாத
[தெள்ளமுதே
அறிவினின் வித்தேவித்தினுள் காய்த்துக்கனிந்த
[நற்சுவையே
அடியரின் குறைகளைந்து ஆதரிக்கவல்ல சாந்த சற்குருவே.

அன்னை எனும் தயவுடையாய் அருந்தவ சற்குருவே
[அடியனேன்
அலைகடல் துரும்புதுபோல் அலைகின்றேன் அவனிதனில்
அகமகிழ்ந்து அருள்புரிந்து அடியனைக்காத்தருள
[வேண்டிநின்றேன்
அருள்சுரந்த அண்ணலே உமது திருவடி பணிந்தேன்
[குறைவிலையே, 52

ஈன்ற தந்தைதாய் மறைந்து குருவினை வழிபட யிடரது
களைந்தே
ஈசனும் முன்செய் கர்மாவினை களைந்து காக்கக் கடமை
[அந்தோ
ஈசனேபோன்று சற்குருவாகிவந்து நற்றுணை பயனல்
வாழ்கின்றேன்
ஈராறுகையனே சற்குரு பணியடியனை காக்க உமது கடமை
[அந்தோ. 53

மண்ணுலகு உய்ய உதித்த சற்குருவே சர்க்கரையே கனியே
மறைகள் நான்குமறிந்த கலைநிதியே கரும்பே கற்கண்டே
[சற்குருவே
மறைந்திடாது மறைகளைக் காக்கவந்த கண்ணே கண்ணின்
ஒளியே
மறைந்தால் உயிர்பிழைத்து வாழேன் மண்ணுலகு
வேண்டுகிலேன். 54

உற்றபாரினில் அசுத்தஅனுதீத மதனைகண்டு கலங்கும்
[அண்ணலே
உற்ற உறவினர்போன்று அடியரைக் காக்கும் கருணை
[வள்ளலே
உற்ற உலகபாமர அறிவீனரை நலம்பெறச் செய்யவந்த
[குருவே
உற்ற உண்மையின் வேதமதனை விளங்கக் காட்டும்
[கருணைநிதியே. 55

அன்னையே தந்தையே அருட்குருவாகி வந்த என் அண்ணலே
அறனின் அருளினை அனுதினமும் வழிபடும் எனதுதந்தையே
அடியனேன் அறியக்காட்டிய அற்புதம் கண்டுகொண்டேன்
அடியர்கள் வழிபட இடரது களைந்தே ஆட்கொள்ளும்
எமது கோவே. 56

மறைபயின்ற அண்ணலே அம்மையே அப்பா ஒப்பிலா
[மணியே
மறைந்திட உலகைத்துறக்க எண்ணுவது கண்டேன்
[சற்குருவே சீனியே
மறைந்திட மனதிட உறுதி கண்டேன் குகைவாச
[நிர்விகர்ப்பமதனை
மறைந்தால் என்சற்குருவே அடியனன் மறைந்திடுவேனே.

கதியற்ற அடியனைகாக்க இறைவி தேவி மதியற்று
[நின்றுளந்தோ
கதிரவன் கானலில் காய்ந்து கிடைப்பன் முன்செய்த
[பயனன்றோ
சந்திரன் குறைதலு வளரலு முன்வினையின் பயனன்றோ
இந்திரன் அகலிகை அணுகின கௌதமர் கொடுசாப
[மன்றோ. 58

உயர் திருமகானு நாரதர் வாழ்த்தினால் சாவித்ரி மகிழ திகழ
[விலையோ
உயர்திருஅரிச்சந்திரன் சத்தியம் தவருது பார்புகழ வாழ
[விலையோ
உயர் திரு துரோபதை தன்னால் முடிந்தது முனைந்து
[பார்த்தய்யோ
உயர்ந்தநெடு மாலினை இருகை கூப்பியபின் காக்க
[வந்தானந்தோ. 59

நகரேஷு காஞ்சிநகர் சற்குரு பீடமன்றோ குருநாதர்
[பிரிந்து ஆண்டு ஆறும்
நற்குண சற்குரு மனமது இடர்பட துர்ச்சனர் செயலால்
[சினந்த தோஷமாம்
நகர் நலம் பெருது மாரியற்று சூழ்நிலைகுன்றி கச்சிநன்னாடு
[படும்பாடு
நம்சற்குரு காஞ்சீபதி வருகில் கடும்பசி நீங்கி சுகம்பட
[வாழ்வர் தாமே. 60

கடவுளை இறணியன் பழித்தது அறிந்ததே அறிஞர்கள்
[தோன்றி ஐயகோ
இறைவனை கல்லே செம்பேஎன ஏசும் அறிஞர்கள்
[பொற்கிழி குவியல் கண்டார்
இறைவனை பழிப்பதே ஓர்வாணிப துறை என்றே அறிந்த
(அறிஞர்
கடவுளை பழிக்கும்கதி பார்படும் பாட்டைப் பாரீர்களே
(மழையில்லை காண்பீர்களே. 61

ஆதி ஔவைமொழி நீதி என்று உணராது மறந்து
ஆலிவாயர்போல் கத்தும் கணக்கற்ற அறிஞரே
[அறிந்தாரோ
ஆறுஆண்டாக கடவுளைப் பழிக்கும் கதிகாட்டினதை
[மழையில்லை பாரே
ஆதிசங்கர பீடசற்குரு செய்தபயோக பலமென்றறிவீரே. 62

கடவுளை வழிபடும் அரசர்கள் வாழ்ந்த நன்னாடு
கடவுளைப் பழிக்க இன்னாள் தோன்றினர் அறிஞர் அந்தோ
கடவுளும் பயந்து கட்டினார் முட்டை கைலையங்கிரியே
கடவுளை கைகூப்பி வணங்கி வழிபட அரசரில்லையே. 63

பாரினில் பானுமதிதனை அறிவாளிகள் கண்டேன் என்கிறார்
பாரினில் கடவுளேது கல்லு கொடுக்குமோ பொருள்
[என்பார்.

பாரினில் உதயமனிதரில் ஓர் உருபோல காட்ட வல்லவன்
[யார்
பாரினைப் படைக்கவல்ல பிரம்மனே கடவுளல்லவா. 64

கடவுளை வழிபடும் அரசர்கள் முற்கால வாக்கியம் அறிவீரே
கடவுளை இல்லை என சொல்லும் இக்கால அரசு ஆதரவு
[பாரே
கடல்கடந்து வந்தஅரிசி ஆதிகாலராணி கடவுள் வழிபட
[செய் நீதிபாரே
கடல் தாண்டிபோன அரசனும் யுத்தம் ஜெயிக்க கடவுளை
[வழிபட்டதுபார் அறிந்தவாரே. 65

பல அரசர்கள் பாரினில் தோன்றி அளவிலாப் பொருளு
[மீட்டி
பல சைவ மறைகள் சொல்லும் பண்பினைக் கேட்டாலந்தோ
பலயீனர் கடவுளை மறைகளைப் பழிப்பது இறைவன் புன்
[சிரிப்பே
பல பாடலில் இறைவன் இறைவி முருகன் சிரித்துப்பார்
[மறைந்ததை மறைகள்பாரே. 66

மகம்மதியர் தேசமாகயிருந்த காலமே குறைவில்லையே
மகம்மதியர் ஆலய வழிபட மானியம் பல ஆலயம்பாரே
இந்தியா இக்காலம் கடவுளை வழிபட அரசர் இல்லையோ
இந்தியா ஓங்கி வளர இறைவனை வழிபடுவீரே. 67

காஞ்சி காமாக்ஷிதேவி வழிபட்ட கருணைமூர்த்திகள்
காமகோடி பீடாதிட்டி மனம் வெறுத்தார் கோயிலைவிட்டார்
காமாக்ஷி பசிக்கென்று பிச்சை எடுப்பதை கோயிலில் பாரே
காலமே கலிகாலமே கடவுளைப் பழிக்கத் தோன்றினர்
அறிஞர்களே. 68

பஞ்சம் நீங்கி மக்கள் சுகத்தொடு வாழ்கவே
தஞ்சம் என்று கடவுளை வணங்கி வழிபடாது சுகமிராது
பஞ்சம் நீங்கிவாழ்ச்செய்வது அரசர்கள் கடமையன்றோ
தஞ்சம் என்றே மக்களைக்காக்க மழை பெய்யக் கடவுளை துதி
செய்வீரே. 69

கருணைமூர்த்திகளான மடாதிபதிகள் பஞ்சம் நீங்க
கருணைமூர்த்தி கடவுளை வழிபடும் பண்பினைப் பாரீரே
உலகம் நலம்பெறக் கடவுளை யாவரும் வணங்குவீரே
உலகம் பஞ்சம்நீங்கி வாழக்கடவுளை தூஷணை செய்யாதீரே.

திருவிசையூரினில் விடைபெற்று திருநள்ளாறு விக்குரிதி
[ஆண்டு
திருக்கன்னிராசி திங்கள் பத்து நாலு வெள்ளி நன்னளில்
[சென்று
திரும்பினேன் சற்குருவைக்காண அத்திபிரகலாதனைக்
காய்ந்தது கண்டு
திருஉள்ளம் தினைப்பினை உணர்தேன் விடைபெறுது
திரும்பினேன் கச்சிநன்னடு. 71

திருவிசைநல்லூர் தீக்ஷதர் ஐயா ஆலயம் விக்குரிதி ஆண்டு
[கண்டேன்
திருமூலர் உதயமாம் சாத்தனூர்தன்னில் சற்குருவினை
[நந்தன ஆண்டு கண்டேன்
திருஅருள் குருநாதர்மீது பாமாலை பாடினேன் மகவுமழலை
[பாட்டினை
திருஉள்ளம் மகிழ்ந்து அன்புகூர்ந்து ஆதரிக்க
வேண்டினேன். 72

தீவினை அகற்றி நல்வினை நல்கும் சற்குருநாதரைப் பாராது
[வந்தேன்
தீவினைப்பயனல் அன்னளிருந்து இன்னள்வரை உளம்பதறு
[கின்றேன்
தீவினை அகற்றி நல்வினை நல்கி தினைத்து நல்லறம் வேண்டி
[வந்தேன்
தீர்க்கமதாக திகழச்செய்து திருஉள்ளம் கனிந்த எனது
[சற்குருநாதரே. 73

11332

(வேறு)

கடவுளருளால் நவநாயகர் உண்டென்பது அறிவீனர்
[அறிந்தாரில்லை
கடவுளருளால் குறைவராது முன்ஜென்மாந்திர பாப
[புண்ணியமன்றோ
கடவுளேஎன எண்ணின அடியனைக் காட்டிக் கடவுளைப்
[பழிக்கிறார் அந்தோ
கடவுளேதேவி காமாக்ஷி முன்தப குற்றம்நீக்கி
[காப்பாற்றினள் ஆறுயேலம் வீடு. 74

கடந்தகால அரிச்சந்திரன் நளன் மற்றும்பலர் கொடுமை
[பொய் என்பீர்
கடல்தாண்டிப்போன ஆங்கிலர் ஜெர்மன் ஜப்பான்
[அடைந்தது அறிந்தீர்

கடக ராசிகாரர் ஏழரைநாட்டுசனி கொடுமைபாரீர் அடியனும்
[கடகராசிதானே
கடவுளை வழிபட் கர்மாவினையினை அகற்றி ஆதரிப்பது
கடவுளை வழிபட்டவர்கள் அறிந்தவாரே. 75

அடியனன் குடியிருந்த வீடுகைவிடபபட்டால் உயிர்துறப்
பேனென்பது அறிந்தவாரே
அடியரைக் காக்கவல்ல கடவுள் மனிதரூபமதாக வருவார்
[என்பது அறிந்தவாரே
அடியனன் வீடுயேலம் ஆறுஇதரரை காட்டாது சம்பந்தி
[எடுத்தார் வீடு
அடியனன் முன்கர் மாவினை களைந்தாளந்தோ தேவி
[காமாக்ஷீ. 76

எண்ணினேன் மணமன்றம் தேவாரமும் சங்கீத கலைபயில
[வேண்டி
என்றும் அழியா முப்பத்திரெண்டு அறமும் வளரும்
[காமாக்ஷீ நிலயம்
என் சற்குருநாதர் துணைக்கொண்டு எங்கள் மதம் திகழ
[வேண்டி
என் சற்குருவே அடியனன் செய்சத்தியம் நிலைக்க
[அருள்புரிவீரே. 77

சற்குருவே வந்தகாலைவிட்டு பந்தக்காலால் கெட்டேன்
[வினை தினையினை
அருக்காது பனையாக்கி பாரில்கேட்டேன் மதிமயங்கி
[நின்றேன்
சத்திய அரிச்சந்திரன் வினையால் காடுகாத்து மானம்
[காப்பாற்றினனந்தோ
மறைக்காடு காத்து கவலை தீர்த்துப்பாரில் வாழ
[எண்ணினேன். 78

சத்தியம் செய்தேன் வீடுதனை மறைக்காடு ஆக்க எண்ணியது
அறிந்த இறைவி குமரன் யேகம்பன் குருஆணை என்றேன்
சத்தியம் செய்வித்த உமது அடிமை சத்தியம் தவறுது
[வாழெண
சன்னிதானம் மனமுவந்து ஆசிகூறியது மகிழ்ந்தேன். 79

மூவரை மூவர்தம் மனைவிதனை அனுதினம் வழிபட்டேன்
தேவி காமாக்ஷி என்றே விலாஸமிட்டு வாணிபம் செய்து
[வந்தேன்
நல்வினை முடிந்தது லட்சுமி கொடுத்ததை கொடு என்றுள்
கலைமதி அருளால் சற்குரு பார்வை திகழ மகிழ வாழ்
[கின்றேனே. 80

அ ஆ இ ஈ நாலு அக்ஷரம் படித்தமகவு சகலமும்
[கற்றேனென்பான்
அறியாத அறிவீனன் என்தந்தை குருநாதரிடம் அறிவித்த
[பாமாலை
அதனுள் குற்றம் குறைகளிருப்பின் மன்னித்தல் குருநாதர்
(கடமை அன்றோ
அறிவிலா அடியனன் உமது அருளினல் எழுதினேன்
(பாமாலை கோவிந்த ருஜு. 81

அந்தணர் மறைகள். வாழி முனிவரர் தேவர் மூவர் வாழி
ஆறுமுகன் குறமாது தேவயானை வாழி ஐங்கரன் வாழி
இறைவி பார்வதி வாணி சரஸ்வதி இலக்குமி வாழி இருநிதி
(இல்லறத்தோர் வாழி
ஆதி சங்கரர் பீடம் வாழி அருந்தவ நம் சற்குரு நால்வர்கள்
(வாழி வாழியே.

மங்களம். **மங்களம்.** **மங்களம்.**

திருஞானசம்பந்தர் தேவாரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆநினும்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது அரனுமமே சூழ்க
வையகமும் துயர் தீரவே.

எனது பாமாலையினை உபகரித்தார் வாழ்த்து.

சீர்பெறுக வடபால் பெண்ணை வளர்சடையோன் கங்கைதந்து
சீர்பெறும் தென்பால் பாதிரி வதிகை அப்பர்களிற்று மாமுக
(காமாக்ஷி தேவி
சீர்சிறப்பும் கொங்கராயனூர் வள்ளல் ராமசாமி மகிழ்
துரவி பூமான்
சீர்பெறுக கொண்டராயரெனும் பண்ணை உத்தமர்
வெங்கடசாமி வாழியே.

மதலை குதலை மொழியின் கலைதனை
ஒருங்கே சேர்த் துதவிய வாணி விலாச
அச்சு நிலயம் திருப்பாதிரிப்புலியூர் அரனே
பாரினில் தழைந்து ஓங்க செய்வானே.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

கலைமதி அருளினால், எனது சற்குருவின் பேரில் 82 பாமாலையாக எழுதினேன். சற்குரு நாதர் அவர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். கற்பக தருபோன்ற சற்குரு இறைவன் சந்திரமௌளி இறைவி அகிலாண்டேஸ்வரி இவர்களின் பூஜை கள் போல எந்த ஆலயமும், அபிஷேகாதி நைவே தனமும் இந்த துர்க்காலங்களில் நடப்பிப்பது வேறு யாவராலும் முடியாமை சற்குரு கைலாஸத் திலே கைலாயபதியிடம் பெற்றுவந்த பீடம் கற் பகத்தருவே ஆதிகால சம்மந்தரும் இறைவனை பணிந்துப் பொற்கிழி பெற்றார். நம் சற்குருவும் இறைவனை பணிந்து பொற்கிழிகள் பெற்று திருக் கூட்டங்களுக்கு அமுது அளித்தல்போல எந்த யிடங்களிலும் நடத்தவே முடியாமை சற்குரு மன தூய்மை ஆதிகால சம்பந்தரெனவே சொல்ல லாமே. சற்குரு எனது மழலை மொழியினை கேட்டு மகிழ்ந்து 1-9-52-ல் சாத்தனூரில் வேண்டுவன சன்மானமும் கொடுக்கப்பெற்றேன்.

திருப்பனந்தாள் பீடாதிபதி

2—9—52-ல் திருப்பனந்தாள் திரு ஆதீனம் சென்று சற்குரு பீடம் கண்டு மகிழ்ந்தேன். ஸ்ரீலஸ்ரீ. சன்னிதானம் அவர்கள் திரு ஆதீனம் மானேஜர் ஸ்ரீமான் **பொன்னுசாமி முதலியார் அவர்களே** பாமாலையினை கேட்கப்பெற்று திரு ஆதீனம் நந்தன ஆண்டு ஆவணி மூலம் திருமடம் வெளியீடு நூலினை நான் கோரி போனது அறிந்து மறைக்காடு தந்தார்கள்.

அருள் சுரந்த அண்ணல் அருள் நந்திவள்ளல் சன்னிதான
மதிசுரந்த மானேஜர் ஸ்ரீமான் **பொன்னுசாமி முதலியாரவர்கள்**
அருள் சுரந்த குமணவள்ளல் சன்னிதான விடைப் பெற்று
மறைக்காடு தந்து அருளினர் கோடி கோடியே.

திருவாவடுதுரை பீடாதிபதி

4-9-52-ல் திருவாவடுதுரை ஆதீனம் சென்று சற்குருவினை கண்டு தெரிசிக்க இரு தினமிருந்து உயர் திருவாளர்கள் ஷராப்பு சங்கரம் பிள்ளை திருவாளர் சாமிநாதம் பிள்ளை அவர்களின் நற்றுணைக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ. சன்னிதானம் அண்ணல் சற்குருவினைக் கண்டு தெரிசித்தேன். களிப்புமுற்றேன். எனது மழலை மொழியினைக் கேட்டு அச்சுமிட்டு பின்பு வந்து நேரில் பார்க்க உத்திரவு மிட்டு சன்னிதான இரகஸ்ய வெளியீடு நூல்களும் வேண்டுவன பொருளும் கொடுத்தருளினார்கள்.

அம்மை அப்பரை செய் அருந்தவ பூஜனை பலத்தால்
ஆதி அனாதியாய் நின்ற முதல்வனை புனைந்த நற்பலனால்
இறைவனும் இறஞ்சி இருபத்திஒன்றதாம் பதவிபீடமதனில்
ஈன்ற தந்தைதாய் தவயோகமே திருவாவடுதுரை ஆதீனந்தனில்

உமதுஉள்ளம் கனிந்தனகண்ட மாசிலாமணி யீசரும்மகிழ்ந்து
ஊழ்வினைகளை களைந்து கைலைஅடைய இடைமருதீசருமகிழ்ந்து
எண்ணினார் திருவெண்ணைநல்லூர் பெருந்துரை சுசேந்த்ரரும்
ஏகமனதாக நால்வர்கள்போல பார்புகழ் நமசிவாய குருவு
[மகிழ்ந்து

ஐங்கரன் ஆறுமுகனாறுளும் நவகோட்டி சித்தர் திருமூலர்
ஒருமனதாக திருநந்திதேவ திருமாளிகை தேவரும்
ஓங்காரி இறைவி மகிழமெய்க்கண்ட தேவர் மற்றும் பலரும்
ஔவைதாய் அறம்சொல் மொழிநடத்தும் சற்குருவே.

ஆதிகாலத்தில் நால்வர்கள் இறைவனைபாடி பொற்கிழி பெற்றார்
ஆதிபகவனிடத்தே நீதிநெறிதனை இயற்றி முற்கிழிபெற்று
திருஅருள்பெற்ற தந்தைக்கு வுபதேசம் செய்த சுப்ரமண்யரே
திருவாவடுதுரை மேவும் சற்குரு இந்திரபதவியன்றே.

தர்மபுரம் பீடாதிபதி

7-9-52ல் தர்மபுரம் திரு ஆதீனம் சென்றேன். ஸ்ரீலஸ்ரீ. சன்னிதான சற்குருவினை பார்க்க திரை திறக்கவில்லை மதி மயங்கி நின்றேன். வினையின் பயனால் சற்குருவினைக்காண வினை மறுத்தது மறு முறை காணலாமென வந்துவிட்டேன்.

திருமடந்தன்னில் கலைநிதி பொக்கிஷம் கண்டேன்
திருஅருள் கலைமதி அருளினைபெற்ற சற்குருவினை
திருநாவுக் கரசரும் தமிழ் சிறப்பினை வள்ளலார்
திருவள்ளுவர்போற்றும் குபேரரே ஆருதிருப் பதிவளர்
சற்குருவே.

அப்பர் சுவாமிகள் போற்றின இறைவனை திருமடந்தனி ஆலயம் கண்டு மகிழ்ந்தேன களிப்புற்றேன்

மாதர்பிறர் கணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடுநீர் சுமந்தேத்திப் புகுவார் வர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடா மலையாறடை கின்றபோது
காதன் மலைப்பிடி யோடுங்களிருவரு வெனக்கண்டேன்
கண்டேன் அவர் திருபாதம் கண்டரியாதென கண்டேன்.

மஹானுக்களும், கற்புக்கரசிகளும்

தேவாதிதேவ மஹாதேவ ஆதிதேவ
சர்வேஸ்வர பரமேஸ்வர நிஷ்களங்க
நிர்மல அந்தர்முக ஞானதிஷ்டித சர்வக்ஞ
மவுன மஹாமவுன ஸ்வேதரூப வைஜயந்தி
ப்ரம்ம விஷ்ணு ருத்ர மஹேஸ்வர சதாசிவ
கணேச சுப்பிரமண்ய சூர்ய சந்திர
நவக்கிரக நக்ஷத்ர திதி யோக கரண
சப்தரிஷிகள் தேவரிஷிகள் பிரம்மரிஷிகள்
காசிப அத்ரி பரதவாஜ விஸ்வாமித்ர கௌதம
ஜமதக்னி வசிஷ்ட பராசர புண்டரீக நாரத
ப்ரகலாத வியாஸ அம்பரீஷ சுக சௌனக
பீஷ்ம ருக்மாங்கத அர்ச்சுன பலிவஜிஷ்ட

விபிஷண அஸ்வத்தாம பலிவியாஸ ஹனுமான்
மார்க்கண்ட க்ருப துருவ தக்ஷசணமூர்த்தி
நாருயணரிஷி தத்தாத்ரி புஜண்ட
ஜனகாதி அகஸ்திய பிரஹஸ்பதி சுக்ரபகவான்
பிரிங்கி நந்தி புலசதிய தன்வந்திரி மரிசி
அம்பரீஷ காசிப கண்ணுவ பரத்வாஜ வால்மீக
பிருகு பாதராயண பராசர சுக பீஷ்ம ரிஷ்யசிங்க
காலவ தூர்வாஸக இந்திருதி தேவர்கள்
மஹேஸ்வரீ பராசக்தி கலாசக்தி மாயாசக்தி
கிரியாசக்தி யோகசக்தி ஞானலக்ஷ்மி தருமதேவி
பூமாதேவி பத்ரகாளி பஞ்சகன்னி சப்தகன்னி
அகல்யா தாரா சீதா த்ரௌபதி மண்டோதரி
அனுசூயா சாவித்திரி நளாயினி கண்ணகி
ரிஷீஸ்வரர்கள் முனிஸ்வரர்கள் யோகிஸ்வரர்கள்
தீர்க்கதெரிசிகள் யாவருள் பூர்ணனுக்ரஹமும்
இஷ்ட சித்தியும் அஷ்ட ஐஸ்வரியமும்
பெற்றுய்யுமாறு பீடாதிபதிகள் நால்வர்கள்
திகழும் குருநாதர்களை என்றும் வழுவாது
அனுதினம் வழிபட இடராது களைந்தே
இறைவன் திருவடி அடைந்துய்ய
சற்குரு நாதர்களின் திருவடி அடைந்து
நிறைந்த ஆயிளும் நீண்ட செல்வமும்
சைவ ஒழுக்கமும் மெய்ப்புகல் கீர்த்தியும்
நன்மகப் பேறும் இன்னன பலவும்
பெற்று நீடூழிகாலம் வாழ்க வாழ்கவே
வளமலி நிலத்தே.

—○—

ஸ்ரீ காமாக்ஷி சமேத ஸ்ரீ யேகாம்பரநாதர் துணை

கடவுள் இருப்பது அத்தாக்ஷி நானே சாக்ஷி

அடிமையான யரன் பன்னிரெண்டு வயதினி லிருந்து வாணிபத்துறையிலேயே பழகினவன். கல் வியில் பழகினவனல்லன். கடவுளருளால் நவநாய

கர்களின் கால கிரமப்படி உச்சம், நீச்சம் என்றதை அனுசரித்தே இலக்ஷ்மி உச்ச காலங்களில் அளவுகடந்த செல்வமும் திறமையும் தருவாள். திடீரென நீச்சம் பெற்ற கிரகம் வந்துவிட்ட நிமிஷங்களிலேயே இலக்ஷ்மி கொடுத்த கடன்களை திருப்பி நம்மையறியாமலே கோர்ட்டுக்கும் போகாமலே யானையுண்ட விளாங்கனிபோல ஆகிவிடும். அது போன்று அடியேனுக்கே நடந்தேரியது. எந்தகாலமும் சரஸ்வதி, காமாக்ஷி, இலக்ஷ்மி இந்த மாதாக்களை தரிசனம் செய்து வந்ததின் பயனால் இலக்ஷ்மி அருள் குறைவுபடினும் தேவி காமாக்ஷி அருளினை குறைக்கவே விருப்பப்படமாட்டார்கள் கலைமதி அருள் சுரக்க சற்குருநாதர் அவர்களின் ஆசியால் எந்த கொடுமை வரினும் வாழ்கின்றேன். ஐயப்பாடில்லை.

பட்டணத்து அடிகளார் சொல்லிய வாக்கியம்.

ஆற்றொடு தும்பை யணிந்தாடு மம்பலவாணர் தமைப்
போற்றுதவர் கடையாள முண்டே யிந்தப் பூதலத்திற்
சோற்றுவியற்றி சுகமற்றுச் சுற்றந்துணியு மற்று
யேற்றாலும் பிச்சை கிடைக்காம லேக்கற்றிருப்பார்களே

பலரும் அறிந்த கைகண்ட வாக்கியல்லவா. அடியனுன எனக்குவந்த ஏழரைநாட்டு சனி பகவானின் கொடுமை. அரிச்சந்திரன், நளன் மற்றும் பலர் அனுபவித்ததை யார் பார்த்தார்களென்று பேசும் அறிவாளிகாள் தற்காலங்களில் கடகராசிக்காரர்கள் யாராயிருப்பினும் படும் பாட்டை கேட்டுத் தெரிந்துக்கொள்ளுங்கள். கடவுளிருப்பதும் நவநாயகர்களிருப்பதும், சனிபகவானின் கொடுமையும் அறிவாளிகள் அறியமாட்டார்கள். நல்ல யோகமுள்ளவர்கள் நினைவிலேயும் வராது. ஏழரைநாட்டு சனி பகவானின் கொடுமையால் எனது பல சொத்துக்களும் ஐந்திடங்களில் நடந்த வியாபாரமும் திடீரென மறைந்தது. அறிந்தவர்களுக்கு தெரிந்தவை, பொய்க் கதையல்ல. எனது உயர்தர

ஆடிசன்பேட்டையிலுள்ள வீடுதனை தர்மங்களுக்காக பயன்படும்படிக்கி இறைவியின் பேரிலும் எனது சற்குருவின்பேரிலும் உறுதிசெய்துகொண்டதை காஞ்சியம்பதியில் பலருக்கும் தெரிந்தவை. அப்படிக்கிருந்தும் கடன்காரர்கள் தொந்திரவுகள் யேற்பட்டும் அரசியலார் மூலமாக பல தொந்திரவுகள் யேற்படினும் இறைவன் இறைவி அருளால் வீடுதனை போகவிடாமல்படி எனது சம்மந்தியே கடவுளாக வந்து காப்பாற்றி வீட்டைமீட்டு தந்தார் என்றால் கடவுளில்லையா. அப்படிக்கிருந்தும் நான் செய்துகொண்ட உறுதி தவறிவிட்டதே என எண்ணினேன். கொடும் பாதகம் அதையும் ஸ்ரீ தேவி காமாக்ஷியும் சற்குருவும் சொற்பனவஸ்தையில் தோன்றி ஆசிகூறி மறைந்தார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகளை அமணர்கள் கல்லை கட்டி கடலிற் பாச்சினும், இறைவன் பஞ்சாக்ஷரப் பலத்தால் கரையேறினது போன்று நாயினும் கடையாகிய என்னை என்னம்மை எண்ணம் அறிந்து காப்பாற்றி அருளினார். இது ரகஸ்யம்.

கலைமதி துணையிருப்பதை உணரும் பொருட்டு பாடின பாட்டில் ஒரு பாட்டு பாடினேன் இதை கேளீர்

சிவகாமியே எந்தன் அபிராமியே எந்தன்
ஈஸ்வரை பிரியாத நேசயே
அவமான மடுவினில் கவிழ்ந்துவிழுந்திடும் அடியேனை
கரையேற்றும் அகிலாண்ட நாயகி
எவைஎவை கோரிடில் அவைஅவை ஈன்றிடும்
எந்தாய் கிருபாகரி இணையற்ற மீனாக்ஷி
கவிகொண்டு உன்னை காலை புகழ்ந்தேன் தேவிகாமாக்ஷி
என்தாயே இங்கு எழுந்தருள்வாயே.

இறைவன், இறைவி, சற்குருநாதர்களை வணங்குவீர்கள். நான் கண்ட உண்மையை உணரும்படி சொன்னேன். நான் கல்வியில் படித்தவனல்லவென்பது கச்சியம்பதியில் பல புலவர்களும் அறிவார்கள்.

பெருந்தகை புலவர்கள் கொடும்பகை திருந்துக

ஆதிகால கவி சக்ரவர்த்தி, கம்பர் புலவர் கால மல்லவே இந்தக் காலம். ஒரு விரகுவெட்டி கவி கன்ன, பின்ன, தென்ன, மன்ன இந்தப் பாட்டிற் கும் உயர்தர பொருள்படுத்தி மன்னரிடம் அறி வீனையும் ஓர் புலவனாக ஆக்கினர் என்றால் அவர் களது மனத்தூய்மையை போற்றற்பாலது. சங்க பலகை யிடந்தரும் நக்கீரரும் இறைவனை நேரில் பார்க்கும் பாக்கியம்பெற்ற பெரும் புலவரும் ஒரு நாள் படித்தது போதாது இன்னும் இலக்கணம் கற்கவேண்டுமென்றது கேட்டு குறைவுபட்டார்க ளென்றால் படிப்பில் யார்தான் வல்லவர். கலை மடந்தை யின்னம் ஓதுகின்றாள். வெரும் பந்தயம் கூறுதீர் புலவர்காள் என்ற வாக்கியம உலகம் அறிந்தனவேயாகும். ஒட்டக்கூத்தர் காலமுமல் லவே இக்காலம். வில்லிபுத்தூரார் குற்றம் சொல் லக்கேட்டால் துரடுகொண்டு காதுகளை அருத்த புலவரும் ஓர் சமயம், அருணகிரியார் அவர்களி டம் பணிந்தார். யார்தான் வல்லவர்கள்.

முற்காலத்து கொங்கணர் என்ற ஒருவர் தனது யோகம் கைவல்யமாகிவிட்டது என காட்டினில் கண்ட கொக்குபோன்று எண்ணித் தாய் மாதா வாசுகி அம்மையாரிடம்பட்ட அவமானமும் போதாதோ அந்த கொங்கணர்.

புலால் வியாபார மகம்மதியரிடம் கல்வி கற்றுணர்ந்தார் என்பது பலருக்கும் தெரிந்தன. மாதா பிதாக்களை உபசரித்தல் என்ற ஒரு உண்மையைக் காட்டிக்கொடுத்தாரல்லவா.

அடியனன் எழுதின பாமாலையினை குற் றம் இருந்தால் திருந்தலாமென எண்ணி கச்சியம் பதியிலுள்ள புலவ பெருமான்களையும் மற்றும் பல புலவர்களிடமும் நெருங்கி பழகலாமென்று பார்த் தேன். ஓய்வே எந்த நேரமும் இல்லையென சொல் லியது மாத்திரம் கண்டேன். கல்வி செருக்கு புல

வர்களின் மனத்தூய்மையை . எவ்வளவும் எழுத லாம். திருந்துவார்களென சுருங்கச் சொன்னேன். புலவர்கள் இந்தக் காலங்களில் பெரும் பொருளாளிகள் மாட்டும் ஆதீனங்களிலும் சிறந்து விளங்குகின்றார்கள். அவர்களால் எனது பாமாலைக்கு குற்றமும் சொல்லுவார்கள். பொருள் கொடுத்தலை யும் தடுப்பார்கள். இவ்வுண்மையை அறியப் போகிறீர்கள். ஆஸ்தான புலவருமாகவும், ஆதீனத்துப் புலவருமாகவும் பொருளாளிகளின் புலவருமாகவும் விளங்குமிடத்தே காண்பீர்கள். அடியனான் சற்குருநாதர்களின்பேரில் பாடினேன். குருநாதர்கள் மழலைச் சொல்லினைபோல கேட்டு மகிழ்வார்கள். புலவர்கள் மகிழ வேண்டுகிலேன். புலவர்களுக்கும் நவநாயகர்கள் உச்சம், நீச்சம் நிகழுவதே. அதனைத் தடுக்கமுடியா புலவர்களே யாவர். தெய்வத்தன்மை வாய்ந்த புலவர்களாக யிருப்பாராகில் ஒருவன் கொண்ட கருத்தினை முற்றுவிக்க முன்வருவார்கள். எல்லாப் புலவர் களின் மனத்தூய்மையை ஸ்ரீ காமாக்ஷிதேவியே திருத்தி ஒத்துழைப்பார்களாக வேண்டுகிறேம்.

இந்தக் கால புலவர்கள் உயர்தரப் பள்ளியில் பதவிபெற்ற புலவர்கள்.

மாரிபோல பாருக்குதவு—திருக்குறள்.
கைமாறு வேண்டா கடப்ாடு—மாரிப்பாட்டு.
என்னாற்றங்கொல்லோ வுலகு—திருக்குறள்.

படித்திருப்பார்கள். பலருக்கும் சொல்லுவார்கள். தங்கள் சொந்த அனுபோகங்களில் மாத்திரம் மறந்திருப்பார்கள்.

உலக பல பாஷைகள் தெரிந்திருப்பது நலமென்றறிவீரே.

நமது தாய் பாஷைகள் உலக மக்கள் தமிழ் நாட்டில் சகலரும் கற்றுக்கொள்வது மிக்க நன்மை. ஆங்கில பாஷைகளைக் கற்ற அறிவாளி

கள் உலக சுற்றுபிரயாணம் செய்ய என்னுடும் தீர மாக போகமுடியும். ஆங்கிலம் என்னுடும் பரவி யுள்ளன. மற்றும் பல பாஷைகள் பதினெட்டும் இறைவனுல் கிடைக்கப்பெற்றன. அறிவாளிகளா கத் தோன்றும் இளைஞர்கள் • கற்றுக்கொள்ளல் மிக்கநன்மையல்லவா. என்னுடும் புகழ்பட வாழ்வார் களல்லவா. நமது இந்து தேசங்களிலே முற்றும் பதினெண் பாஷைகள் உள்ளன. அவை அனைத் தும் தெரிந்திருப்பது என்னுடும் எளிதாக பிரயா ணம் செய்யலாமல்லவா. திறமையும் புத்தியுமுள்ள இளைஞர்கள் கற்றுக்கொள்ள விருப்பமுடைய பிள்ளைகளை வீண் பிரசாரங்களால் இளைஞர்கள் கெட்டுப் போய்விடுகிறார்கள். ஆங்கிலம் இன்று லக்ஷக்கணக்கான படித்த பிள்ளைகளுக்கே வேலை யில்லாமல் திண்டாடுவதைப் பார்ககவில்லையா? எந்த பாஷை கற்றாலென்ன. கட்டாயப் படிப்பாக வைத்தாலென்ன. எந்தவிதமும் கற்றல் நலமென அறிவீர்கள். வேலையில்லாமல் திண்டாடும் இளைஞர் களைக் கார்க்கவேண்டிய வழிகளைத்தேடியும் கைத் தொழில் அபிவிருத்தி செய்ய அறிஞர்கள் முன் னணியில் நின்று பெரும் பொருளாளிகளைக் கண்டு கைத்தொழில் விருத்தி செய்ய முயலுங்கள். கோயி லினும், பள்ளியிலும் தலையிடாமல் யிருப்பீர்களாக வேண்டுகிறேன்.

பண்டிதராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டு பாடையும்
அண்டமுதலா அரசன் சொன்னவாரே.

சிங்களம் சோனகம் சீனம் சாவகம்
கொங்கணம் குடகம் கொல்லம் துளுவம்
வங்கம் கடாரம் மகதம் கோசலம்
கங்கம் காச்மீரம் கலிங்கம் நேபாளம்
அங்கம் காந்தாரம் ஆகிய மொழிகள்
தங்கி வளரும் தமிழ்நாடென்ப

இத்தகைமையினுலேயே தமிழ்த்தாய் தாயா னுள். பரமனை பாடும் பெருமையும் நம் தமிழ் தாய்க்கே மிகுதியாக உரியது.

கடவுளும், அரசர்களும், குடிகளும்.

பண்டயகால அரசர்களின் கடவுளின் வழிபாடும் இறைவன் ஆலய வழிபாடுகளும் இன்று குறைந்திருப்பது உலகம் எங்கும் அறிந்தவை குடிகளும் கடவுளை கல்லே, செம்பே, என்று ஏளனம் பேசுதலும் சற்குரு மகானுக்களை பழிப்பதுமே ஓர் வாணிபமாக ஆகிய காலம் அதன் கொடுமை ஆறு ஆண்டுகளாக மழையற்று குடிக்க தண்ணீரற்று படும்பாடு அறிஞர்கள் அறிந்தார்களா. விஞ்ஞானிகளே ஓர் பெரும் கடவுளாக மதித்து கோயிலை இடித்து போடுங்கள். ஆஸ்பத்திரி பள்ளிக்கூடம் அமைக்கலாமென்றும், கடவுளிருப்பதையும் மதியாது மேடைமீதேறி நாவு தளராமல் பேசுகிறார்களே அக்ரமம் கல்வி செருக்கு எனவே சொல்லக்கூடும் கண்டிக்க அரசரும் இல்லையே. பண்டைய கால அரசர்கள் கடவுளை வழிபட்டது கண்ட வண்ணா சின்னன் அரசனாக வேடம் பூண்டு ஆலயங்கள்தோரும் அனுதினமும் ஆறுகால பூஜை தவராமல் நடந்து வருகிறதா? மந்திரி. ஒரு நாளும் குறைவின்றி நடந்து வருகிறது அரசே. ஒருநாளும் தவராமல் அந்தணர்கள் நாலு வேதங்களும் ஓதுகிறார்களா? மந்திரி. ஒருநாளும் தவறாமல் அந்தணர்கள் நாலு வேதங்களும் ஓதுகிறார்கள் அரசே. மாத மும்மாரி மழை பெய்கிறதா? மந்திரி. ஒருமாதமும் தவராது மும்மாரி பெய்து வருகிறது அரசே. பலரும் நேரில் பார்த்தவை சினிமா பொய்க் கதையல்ல.

திருவள்ளுவர் அவர்களும் அரசியல் நடத்தும் வழி காட்டிய மொழிகள் பல உள்ளன. அதில் இரண்டு மொழிதனை கவனப்படுத்துகிறேன்.

> குடி தழீ இக்கோலோச்சு மானிலமன்னன்
> அடி தழீ(இ) நிற்குமுலகு. —திருக்குறள்.
> வேலன்று வென்றிதருவது மன்னவன்
> கோல(து) உங்கோடாதெனின். -திருக்குறள்.

மகம்மதிய மன்னவனிடமும் ஸ்ரீ ரங்கனாதர் பேசினார் என்றால் அவர்களின் மனத்தூய்மையும்

கடவுளின் அன்பும் இதை தெரிந்தும் மறந்து பேசும் மதியீனரை என்னவென்று சொலவது கடவுளை பழிக்காதீர்கள். பழிக்காதீர்கள்.

ஆலய சட்டமென செய்த ஓர் கட்சி எரிந்தே போயின அந்த ஆலய சட்டங்களில் தானே திருக் கோயில்கள் எல்லாம் திகைத்து நிற்பதும் பக்தர் களாகவுள்ளவர்கள் மனததுடிப்பும் தாங்கமுடி யாமை. கடவுளை பழிப்பதினல் கண்ட பலன் ஆறு ஆண்டுகளாக மாரியற்று பஞ்சம் நீடித்திருக்கின்றதல்லவா நல்லார் ஒருவர் வுளரேல் அவர் பொருட்டு பெய்யுமழையே பண்டயகால அரசர்களாக இருந்தால் உலக நன்மையை கவனித்து விரோதமான சட்டமாக இருந்தால் திருத்துவார்கள் அதினும் ஆலய சட்டமென்பது கடவுளுக்கும் சட்டம்விதித்த வர்கள் ஆமோதித்த அரசர்கள எவ்வழி என்பது நன்ருக யோசித்துப் பாருங்கள் ஆலய சட்டங் களின் அனியாய முறையில் நடந்து வரும் காஞ்சீ புரத்தில் ஸ்ரீ காமாக்ஷி தேவி அம்பாளின் வழிபாட் டின் குறைவுகளை ஒன்று மாத்திரம் தெரிந்தவரை சொல்லுகிறேன்.

ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் வழி பட்ட கடவுள் ஆலய திருப்பணி அழகும் வெள்ளி ரதங்கள் செய்து வைத்து தேவியார் பவனி வரும் அழகை பார்த்து ஆனந்தமடைந்தும் வருஷத் திற்கு பத்தாயிரம் ரூபாய்க்கு குறைவுயில்லாமலும் சிறப்பொடு நடந்து வந்த ஆலயம், இன்று பக்தி சிறத்தைகள் குரைந்தும் பஞ்ச பர்வங்கள் உர்ச் சவங்களும் குறைந்து உணவுக்கும் பரதேவதை படும்பாடு சகிக்க முடியாமை தர்க்கால அறிவாளி கள் கல்லுக்கா பசி என்றும் யேளனம் பேசும் காலங்களில் இதையும துணிவாகவே எழுத துணிந்தேன் கல்லு என்று நினைப்பவனுக்கு கல்லே கடவுள் என்பவனுக்கு கடவுளாக பராசக்தி நடு நாயகமாக உட்கார்ந்திருக்கிருள் பராசகதி அவள் சொருபம் கண்டவர் தெரிந்திருப்பார்கள்.

தற்கால தர்மகர்த்தர்களாக ஒரு பூமான் எண்டோன்மெண்ட் போர்டு மூலமாக நியமன தர்மகர்த்தர்களின் அக்ரமங்கள் சகிக்க முடியாமை காமாக்ஷி புசிக்கென்று எங்கு பார்ததாலும் பிக்ஷை எடுப்பதே தொழில் வசூலும் கிலவும் அந்த பூமானுக்குத்தான் தெரியும் ஆச்சாரயீனரை கோயிலில் சுத்தப்படுத்த அமைப்பதும் பிணயல்களைக்கொண்டு மெழுகுதலும் அவர்களின் கொடுமை பலரும் அறிந்திருப்பார்கள் தேவிக்கும் மனம் பொருக்காது திணறுகின்றாள் தாய். அருணகிரிநாதர் திருவாக்கினால் ஆசரவீனனாகியே மிக. ஆபாசனாகியோடி நாளுமழிந்திடாதே. என்று சொன்னார் நான் சொல்லவில்லை பிற்காலங்களில் நடக்கப்போவதை அறிந்த அருணகிரிநாதர் முன்னாடியே பாடி வைத்திருக்கிறார் திரண்ட பொருள்வுள்ள ஆலயங்களுக்கு குறைவுக்குக் காரணமில்லை. பீடாதிபதிகள் வழிபடும் ஆலயங்களை ஒன்றேனும் கைவிடாமல் பாதுகார்த்து வருகிறார்கள் பீடாதிபதிகள் பல ஆலயங்களையும் தமது உயிர் போன்று பாதுகார்த்து வருகிறார்கள் கொடுமைகள் தாங்காமல் விட்ட பல ஆலயங்கள் இன்று திண்டாடுகின்றன ஔவை பிராட்டியார் சொன்ன புனித மொழிகள் கோயில் யில்லா வூரில் குடியிருக்கவேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று. தெய்வம் சீறிற்கை தவமாளும் யார் இந்த வாக்கியங்களை அரியாதார். கல்வி செறுக்கினாலும் பொருள் செறுக்கினாலும் சிலர் மறந்திருக்கலாம், தற்போது உலகத்தில் மேதாவிகளும் அறிவாளிகளும் விஞ்ஞானிகளும் குதர்க்க தர்க்கவாதிகளும் திரள்திரளாக திகழும் காலம் அறிவிலா அரிவீனன். கடவுள் அருளினால் எழுதினேன். மழலை சொல் போன்று கேட்டு மகிழ்வோர் மகிழட்டும் இகழ்வோர் இகழட்டும் அரசியலார் ஆலய திட்டங்களை மிக்க பக்தி சிறத்தையாக கவனிக்க வேண்டி ஸ்ரீபரதேவதை ஸ்ரீ காமாக்ஷீ தேவியினை கோருகிறேன்.

உ

திருப்பணியை முற்றுவிக்க.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் மிராசுதாரரும் புதுக்கோட்டை அரசுதனில் அமைச்சர் பதவிபெற்ற பரம்பராதினரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் மடம் சர்வாதிகாரியுமான

பிரம்மஸ்ரீ A. R. சேஷய்ய சாஸ்திரிகள்,

சென்னை மாகாணம் ஐகோர்ட்டு வக்கீல் மைலாப்பூர் பண்டு நிலயம் டைரக்டர்களும் புரசவாக்கம் ஆர்ட்ஸ். அகாடமி சபா உரிமையாளரும் புரசவாக்கம் வெள்ளாழத் தெரு 42, நெ.

பிரம்மஸ்ரீ K சீனுவாசய்யர் அவர்கள் அட்வகேட்.

தென்னாற்காடு மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் போஸ்ட் கொங்கராயனூர் கிராமம் மணியம், நிலச்சுவான் தாரரும் திருவதிகை வீரட்டானம் தற்கால தர்மகர்த்தருமான

உயர்திரு. எஸ். ராமசாமி ரெட்டியார் அவர்கள்.

செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சீபுரம் ஆடிசன்பேட்டை

ஸ்ரீ காமாக்ஷி நிலயம் P. S. கோவிந்தராஜு முதலியார்.

வடாற்காடு மாவட்டம் வேலூர் பாக்கு மண்டி வேலூர் நிலசுவான்தாரரும

திருவாளர் வே. துரைசாமி முதலியார் அவர்கள்.

ஸ்ரீ காமாக்ஷி தேவி சமேத ஸ்ரீ ஏகாம்பரநாதர் துணை.

அரசு அமைதியும் அபிவிருத்தி ஓங்குக

மேடம் கொண்டு மீனம் வரை
ராசி பனிரெண்டையும் சேர்த்து
நாடு நலம்பெற சினம்கொள்ளாது
செய்வித்த உமது பண்பே பண்பு.

ராஜ தந்திரிகளாகிய பெருந்தகை புனித அறிவில் சிறந்தோர்களுக்கு மழலைச்சொல்லின் ஐந்தெழுத்தே போன்று முக்கியமாக என் நினைவில் கண்டதை சுருக்கமாக எழுதினேன். எவ்வளவும் விரிக்கவும் சுருக்கவும் இறைவி அருளினாலேயே தான் அறிவு.

இறைவி தேவி அருளால் கிடைக்கப்பெற்ற நமது தாய் நாடு இன்று நிறைந்து நின்றன. பல பத்திரிகைகளைப் பார்க்குங்காலத்தில் முன்னோன் மேல்நாட்டு சுரண்டல் என்றவர்

களே இன்னுள் வடநாட்டு சுரண்டல் என்கிருர்கள். என்று தான் இந்தப் புனித மொழியை ஒழித்துக் கட்டுவார்களோ தெரியவில்லை. நமது தாய்நாடு, உலகம் முன்னேற்றமடைய வேண்டுமானுல் கடவுளை பழிப்பதை ஒழியுங்கள். சில சாரர்கள் கொள்கையை அறவே கூடிய சீக்கிரம் பரதேவதையே ஒழித்துக்கட்டுவீர்கள். ஐயப்பாடில்லை, ஒரு காலம் இரணியன் தோன்றிஞன், மறைந்தான். மற்ருெரு காலம் சமணமதமிருந்து அழிந்தது. உலகம் உள்ளவரையில் கடவுளை பழிப்பார்கள் அந்தக் கூட்டங்களை இறைவனுல் அழிக்கப் படலாம். மனிதர்களால் ஆகாதது தவளைகள் இரவெல்லாம் கத்தி கத்தி தொண்டை வீங்கிச் சாவதுபோலவே கடவுளைப் பழிப்போர்களின் கதி எது எப்படிப் போயினும் கடவுள் துணைக்கொண்டு அரசியலார் கவனிக்க வேண்டியதவசியம்.

ஐந்து திருத்தங்களாவன:— ஆறு ஆண்டுகளாக பஞ்ச கோரத்தால் கிராமவாசிகள் கிராமங்களை விட்டு டவுன் வாசம் வந்தோர்களை கண்டுபிடித்து கிராமத்திற்கு அனுப்பி விவசாயங்களை கவனிக்கச்செய்தால் உணவுப் பஞ்சம் நீங்குமென்பதை யோசித்துப் பாருங்கள். நெசவாளிகளின் குறைகளை நீக்கும்வழியை திறம்பட கண்டுபிடித்து நெசவாளிகள் குறையை தீர்த்து பட்டினி நீக்கிடில் அரசியலார் அவர்களுக்கு பெரும் புகழும் நாடு பிடித்த நன்மை அன்றுதான் உணருவார்கள். இதனைக் கண்டுபிடித்தல் முக்கிய கவனிப்பாக ஆகும். ஆதிகாலங்களில் முதலாளிகளும்-குமாஸ்தாக்களும் என்ன கஷ்டம் அடைந்ததைக்கண்டு இன்று சட்டமாக செய்து என்ன சுகப்பட்டார்கள். பல துறைகளிலும் முதலாளி - பாட்டாளி தகராறுகளினுலேயே முதலாளிகள் வியாபாரத்தை நிறுத்திவிட்டேன். பாட்டாளிகளே வேண்டாமென்றதால் இன்று எத்தனை குடும்பங்கள் பட்டினி கிடப்பதை மேடை பிரசங்கிகள் அறிந்தார்களா? எத்தனை பட்டினியை தணித்தார்கள். மேடையோடு சரியே இதனை அரசியலார் கவனிக்கவேண்டியது அவசியம், பெரும் புண்ணியமும், கண்ணியமும் அடைவீர்கள். மதுவிலக்கு பேயினை தடுக்க எவ்வளவு உழைப்பு அடக்குமுறை ராணுவ சிலவுகள் வருமான மிழந்து சிலவுகளை கணக்கிட்டுப்பாருங்கள். இது விஷயம் இறைவியாலேதான் தவிர்க்கவோ எவ்விதமோ செய்யமுடியும். கடவுளுக்கும் ஆலய சட்டமென்பது அறிந்த இறைவன், ஆறு ஆண்டுகளாக புன்சிரிப்பு சிரித்தே காட்டின குடிதண்ணீர் பஞ்சம், உணவுப் பஞ்சம் அரசியலார் சட்ட சபையில் நடந்த கூக்குரல் கைலையையும் எட்டியிருக்கலாம். சாஸ்திரமில்லை, கடவுளில்லை என்னும் அறிவாளிகான் சில ஆண்டுகளுக்குமுன் கச்சியம்பதியில் மழையில்லாமல் பஞ்சம் யேற்பட்டதை அறிந்த ஓர் அந்தணர் கந்தாடே

சுப்பிரமண்ய சாஸ்திரிகள் வருண யாகம் ஆரம்பித்தார், அதற்காக எதிர்ப்பு மேதாவிகள் அரசியலார்வரை பார்த்தும் யாகம் பூர்த்தியாகும் காலத்தில் மழை பொழியவில்லையென்றால் குற்றச்சாட்டுக்கு உட்படுவதாக ஒப்புக்கொண்டார். இறைவன் அருளிருந்தமையால் பூர்ணுவதி முடிவு தினம் திடீரென மழை பொழிந்து சர்வ தீர்த்தங்களும்யேறி குளங்களும் நிறம்பியது. தற்போது உள்ளவர்கள் அறிந்திருக்க முடியாமை. எனது சற்குரு சமீப தினங்களுக்குமுன் தஞ்சை மாவட்டம் ஆறுபாதி என்னும் கிராமத்தில் வருண ஜபம் ஆரம்பித்து பூர்ணுவதி ஆகுந்தினம் திடீரென மழை வீழ்ச்சியால் நைவேத்தியங்களும் ஆயிரக்கணக்கான சந்தர்ப்பணை உணவுகளும் பட்டபாடு அறிந்தவர்களுக்கு தெரிந்தவை. சாஸ்திரம் இல்லையென்ற சில சாரார்கள் குணங்களை அறியாது குற்றங்களை மட்டிலும் தங்களுக்குச் சாதகமானதை எடுத்துப் பேசும் அறிவாளிகளே சாஸ்திரம் இல்லையென்றால் அறவே இல்லையென்று சாதிக்கலாம். அதை விட்டு சமயோசிதமாக மேடையில் பேசுவது கடவுளையும் சாஸ்திரங்களையும் தூஷிப்பதும், ஒரு சாரார் கோயிலில் செய்யும் நல் விஷயங்களை தூஷிப்பதும் அவர்கள் திருமணம் செய்விப்பதை தடுத்து சுயமரியாதை திருமணம் என்று சொல்லி அந்தணர்களுக்கு கிடைத்தது சிறிய பொருள் மற்றவர்கள் செய்விப்பதற்காக பெரிய பொருள், இலவசமாக செய்வித்ததாகக் காணும். அவன் கெட்டான் குடியன் எனக்கு ரெண்டு திரான் ஊத்து என்பதுபோலவே ஆகும். யோசித்துச் சிந்தித்துப் பாருங்கள். கடவுளையும், மகானுக்களையும் பரதேவிகளையும் தூஷிப்பதால் பொற்கிழி நிறம்ப கிடைக்கின்றது. இது மட்டுமா? அரசியலை தாக்குவது மாணவர்களை கூட்டாளியாக சேர்த்துக்கொண்டு வீண் தொந்திரவினால் என்ன பலன். யார்தான் அடைந்தார்கள் இந்த அரசியலார் கோயிலை இடித்துவிட மாட்டார்கள். ஆகையால், ரஷ்யாவைக் கொண்டுவரலாமா? அமெரிக்காவைக் கொண்டு வரலாமா? என்றே எந்த நேரமும் இதே தொழிலாகிவிட்டது. நம் இறைவி திகழும் நம் நாடு என்றும் இரத்தச்சிந்தி பிடிக்காது கார்க்க நம் இறைவி கண்கண்ட தேவதை இருப்பதால் ஐயப்பாடில்லை. குறுகிய மனப்பான்மையை ஒழித்து நம் நாடு நலம்பெரும் வழி தேடுங்கள். ஒத்தால் வாழலாம். ஒரு சிறிய குடும்பத்தை வாழ்விக்க முடியாத நாம் ஒன்றும் செய்யவே முடியாது. இறைவன், இறைவி துணையில்லையென்றால் யாரும் வாழவே முடியாது. கடவுளை பழிக்காதீர்கள். பழிக்காதீர்கள்.

113321

உ

காஞ்சீபுரம் குமரகோட்டம் கந்தவேள் துணை.

திருப்புகழ்.

அறிவிலா பித்தருன்ற
னடி தொழாக் கெட்ட வஞ்ச
ரசடர் பேய்க்கத்தர் நன்றி யறியாத

அவலர் மேற்சொற்கள் கொண்டு
கவிகளாக்கிப் புகழ்ந்
தவரை வாழ்த்தித் திரிந்து பொருள்தேடி

சிறிதுகூட்டிக் கொணர்ந்து
தெரு வுலாவித் திரிந்து
தெரிவை மார்க்குச் சொரிந் தவமேயான்

திரியு மார்க்கத்து நிந்தை
யதனை மாற்றிப் பரிந்து
தெளிவு மோட்சத்தை யென்று அருள்வாயே

இறைவர் மாற்றற்ற செம்பொன்
வடிவம் வேற்றுப் பிரிந்து
இடபமேற் கச்சிவந்த வுமையாள்தன்

இருளை நீக்கத் தவஞ்செய்
தருள நோக்கிக் குழைந்து
விறைவர் கேட்கத் தகுஞ்சொ லுடையோனே

குறவர் கூட்டத்தில் வந்து
கிழவனாய்ப் புக்குநின்று
குருவியோட்டித் திரிந்து தவமானை

குணமதாக்கிச் சிறந்த
வடிவு காட்டிப் புணர்ந்த
குமர கோட்டத் தமர்ந்த பெருமாளே.

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.